**செய்தி வெளியீடு எண்:486** **நாள்: 27.07.2017**

**டாக்டர் A.P.J. அப்துல் கலாம் மணிமண்டபம் திறப்பு விழா, ராமேசுவரம் – அயோத்தி விரைவுத் தொடர் வண்டி துவக்க விழா, ஆழ்கடல் மீன்பிடிப்பினைப் பரவலாக்கும் திட்ட துவக்க விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் உரையாற்றினார்கள் – 27.7.2017**

*** * * ***

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.மோடிஜி அவர்களே,
மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களே,
மாண்புமிகு திரு. வெங்கய்யா நாயுடு அவர்களே,
மாண்புமிகு மத்திய வர்த்தக மற்றும்
தொழில் துறை இணை அமைச்சர்
திருமதி நிர்மலா சீத்தாராமன் அவர்களே,
மாண்புமிகு மத்திய நெடுஞ்சாலை மற்றும்
கப்பல் போக்குவரத்து இணை அமைச்சர்
திரு.பொன். ராதாகிருஷ்ணன் அவர்களே,
மாண்புமிகு நிதி மற்றும் மீன்வளத் துறை அமைச்சர்
திரு.ஜெயக்குமார் அவர்களே,
மாண்புமிகு தமிழ்நாடு
தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்
திரு மணிகண்டன் அவர்களே,
மற்றும் இன்றைய இனிய நிகழ்ச்சியில் பங்குபெற்றுள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, அரசு அலுவலர்களே, பெரியோர்களே, தாய்மார்களே,
பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே, உங்கள் அத்தனை பேருக்கும் என் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

“ராமநாதபுரம் மாவட்ட மக்களும் மன்னர்களும்
தமிழையும், ஆன்மீகத்தையும்

இரண்டு கண்களாகப் போற்றியவர்கள்''
என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புகழ்ந்துள்ளார்கள்.

இந்தியாவின் தென்கோடியில் உள்ள
சைவ திருத்தலமாக விளங்கும் ராமேஸ்வரம் ராமாயணத்தால் புகழ் பெற்றதைப்போல
மீண்டும் டாக்டர் அப்துல் கலாம்
அவர்களால் புகழடைந்தது.

ஏழ்மை நிலையில் இருந்தாலும்,
முன்னோர்கள் பாமரர்களாக இருந்தாலும்,
எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாத
வளர்ச்சி அடையாத
குக்கிராமத்தில் பிறந்து வளர்ந்தாலும்,
உண்மை, உழைப்பு, அன்பு,
அறிவுக்கூர்மை, தன்னம்பிக்கை
இவற்றை மட்டுமே மூலதனமாகக் கொண்டு
நாட்டின் மிகப் பெரிய பதவிகளான,
குடியரசுத்தலைவராகவும், பிரதமராகவும் உயர்ந்து
சாதனை உச்சத்தைத் தொடமுடியும் என்பதற்கு..
டாக்டர் அப்துல் கலாம் அவர்களும்,
மாண்புமிகு பாரதப் பிரதமர்
அவர்களும் உதாரணமானவர்கள்.

அதனால்தான் டாக்டர் அப்துல் கலாம்
அவர்களின் மணிமண்டபத்தை
மாண்புமிகு பாரதப் பிரதமர்அவர்கள்
தங்கள் திருக்கரங்களால் திறந்து வைப்பது
மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள்,
டாக்டர் அப்துல் கலாம் அவர்களின்
இறுதிச் சடங்கிற்கு வந்திருந்து
மரியாதை செலுத்தினார்கள்.
தற்போது, அவரது மணி மண்டபத்தையும்
திறந்து வைக்க வந்தமைக்கு
தமிழ்நாட்டு மக்களின் சார்பாக
என் மனமார்ந்த நன்றியை
தெரிவித்துக் கொள்கிறேன்.

மணிமண்டபம் அமைக்கத் தேவையான நிலம்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் பேரில்
வழங்கப்பட்டு, அதில்
டாக்டர் அப்துல் கலாம் அவர்களின்
மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளது.
இந்த வளாகத்தில், ஏவுகணை நாயகனின் அக்கினி ஏவுகணையின் மாதிரி
மிகவும் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் அப்துல் கலாம் அவர்களுக்கு
மரியாதை செலுத்தும் வகையில்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
அறிவியல் வளர்ச்சிக்கும்,
இளைஞர் மற்றும் மனித வள மேம்பாட்டிற்கும்
பணியாற்றிய தமிழகத்தைச் சார்ந்தவர்களுக்கு
ஐந்து லட்ச ரூபாயுடன்
எட்டு கிராம் தங்கப்பதக்கத்தையும் உள்ளடக்கிய

டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருது வழங்கப்படும்
எனவும் அறிவித்து, அதனை
தன் வாழ்நாளிலேயே செயல்படுத்தி
டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் மீது தனக்கிருந்த
மரியாதையை வெளிப்படுத்தினார்கள்.
இந்த அரிய சந்தர்ப்பத்தில் மாண்புமிகு பாரத பிரதமர்
அவர்கள் முன்னிலையில் இங்கே சில முக்கிய
கருத்துக்களை தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

ராமநாதசுவாமி திருக்கோயில் மற்றும்
டாக்டர் அப்துல்கலாம் பிறப்பிடம்
ஆகியவை போன்று இன்னும் பல
பெருமைகளை பெற்றிருக்கும்
ராமேசுவரத்தை அழகுபடுத்தி வருவது
இங்குள்ள அமைதியான சமுத்திர அலைகளும்,
மீனவ வலைகளும் தான் என்பதை
நாம் மறுக்க முடியாது. அதே நேரத்தில்
ராமேசுவரத்து அலைகள் அமைதியாக இருந்தாலும்,
அதில் வலை விரிக்கின்ற மீனவர்களின் வாழ்க்கை,
தொடர்ந்து அமைதியை இழந்து வந்திருக்கிறது
என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

பாக் வளைகுடாவை ஒட்டி
தமிழ்நாட்டில் 5 கடலோர மாவட்டங்களில் உள்ள
305 மீனவ கிராமங்களில்
3 லட்சத்திற்கும் அதிகமான மீனவர்கள்
மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு
வாழ்ந்து வருகிறார்கள்.
தமிழ்நாடு மீனவர்கள் பாக் வளைகுடாவில்
தொடர்ந்து சந்தித்துவரும் இன்னல்களைப்

போக்குவதற்கு நிரந்தரத் தீர்வாக கட்சத் தீவை மீட்க
வேண்டும் என்ற கோரிக்கையோடு,
இழுவலை மீன்பிடிப்பினை ஆழ்கடல் தூண்டில் மற்றும்
செவுள்வலை மீன்பிடிப்பு முறைக்கு
பரவலாக்கம் செய்ய வேண்டும்;
அத்திட்டத்திற்கான சிறப்பு நிதியாக
1520 கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்று
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
3.6.2014 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர்
அவர்களை நேரில் சந்தித்து, கோரிக்கையாக
வைத்தார்கள். அக்கோரிக்கையை,
27.2.2017 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர்
அவர்களை நேரில் சந்தித்து நானும்
வலியுறுத்தினேன்.
அக்கோரிக்கையினை ஏற்று,
மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள்
11.5.2017 அன்று 750 இழுவலைப் படகுகளை
ஆழ்கடல் தூண்டில் மற்றும் செவுள்வலை படகுகளாக
மாற்றி அமைக்கும் திட்டத்திற்கு
சிறப்பு நிதியுதவியாக 100 கோடி ரூபாயும்,
நீலப் புரட்சி திட்டத்தின்கீழ் 100 கோடி ரூபாயும் சேர்த்து,
மத்திய அரசின் 50 விழுக்காடு பங்களிப்பாக
மொத்தம் 200 கோடி ரூபாய் வழங்கினார்கள்.

தமிழ்நாடு அரசு தனது 20 விழுக்காடு பங்களிப்பு
மற்றும் வாழ்வாதார நிதியுடன் சேர்த்து
86 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து
முதற்கட்டமாக 500 இழுவலைப் படகுகளை
ஆழ்கடல் தூண்டில் மற்றும்

செவுள்வலை படகுகளாக மாற்றி அமைக்கும்
திட்டத்தினை 286 கோடி ரூபாய்
செலவில் செயல்படுத்திட ஆணையிட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், பாக் வளைகுடாவில் இருந்து
2 ஆயிரம் இழுவலைப் படகுகள்
ஆயிரத்து 621 கோடி ரூபாய் செலவில்
மூன்று கட்டங்களில் மாற்றி அமைத்து
பரவலாக்கம் செய்யப்படும்.

தமிழ்நாடு மீனவர்களின் துயர்துடைக்கும் விதமாக,
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
கோரிக்கையினை ஏற்று,
பாக் வளைகுடா மீன்பிடிப்பினை
ஆழ்கடல் மீன்பிடிப்பிற்குப் பரவலாக்கும் திட்டத்திற்கு
ஒப்புதல் அளித்து,
நேரிடையாக சம்பந்தப்பட்ட அமைச்சகங்களை
அறிவுறுத்தி போதிய நிதியினை விடுவித்ததோடு,
இன்றைய தினம் இங்கு வருகைபுரிந்து
மீனவர்களுக்குப் பணியாணை வழங்கி,
இத்திட்டத்தினைத் துவக்கி வைத்திட இருக்கும்
மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு
தமிழ்நாடு மீனவர்கள் மற்றும்
தமிழ்நாடு அரசின் சார்பாக
எனது மனமார்ந்த நன்றியினை
உரித்தாக்கிக் கொள்கிறேன்.

I wish to thank Hon’ble Prime Minister for extending financial Assistance of Rs.200 crore this year for conversion of ‘Bottom

Trawling Boats' to 'Deep Sea Long Liners', besides other Projects and launching this Scheme today.

இந்த அரிய திட்டத்தின் மூலம்,
பாக் வளைகுடாவில் தமிழ்நாடு மீனவர்கள்
சந்தித்து வரும் துயரங்களும் இன்னல்களும்
வெகுவாகக் குறைவதோடு,
அவர்களின் வாழ்வாதாரமும் தழைத்தோங்கும்
என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

குந்துகால் பகுதியில் அமையவுள்ள
மீன் இறங்குதளத்திற்கான
மத்திய அரசின் பங்களிப்பானது,
மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின்
நேரடி அறிவுறுத்தலால், மத்திய நிதி அமைச்சகம்
ஒப்புதல் அளிக்கவுள்ள
நிதியில் இருந்து மேற்கொள்ளப்படும்.

இவ்வாறாக, பாக் வளைகுடா மீனவர்கள்
மீன்பிடிப்பதற்கான போதிய உட்கட்டமைப்பு
வசதிகளை ஏற்படுத்துவதற்கு,
உறுதுணையாக விளங்கும் மாண்புமிகு
பாரதப் பிரதமர் அவர்களுக்கு எனது நன்றியினை
மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூரில் கட்டப்பட்டு
வரும் துறைமுகத்திற்கான
மத்திய அரசின் பங்களிப்பினை விரைந்து விடுவித்திட
சம்பந்தப்பட்ட அமைச்சகத்தை அறிவுறுத்துமாறும்
மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் இந்த இனிய

நேரத்தில் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
சீரிய முயற்சி மற்றும் இந்திய அரசின் தொடர்
நடவடிக்கைகளின் விளைவாக
இலங்கை அரசால் பிடித்து வைக்கப்பட்டிருந்த
2 ஆயிரத்து 664 மீனவர்களும்
தமிழ்நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர்.
357 படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளது.
இதற்காக, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு
தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, மீனவர்கள் சமுதாயத்தின் சார்பாக எனது
மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
2015 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இலங்கை
அரசின் பிடியில் உள்ள தமிழ்நாடு மீனவர்களின்
மீன்பிடிப் படகுகளை விடுவித்து,
தமிழ்நாடு மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காத்திட
மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள்.
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
வழிநடக்கும் அம்மா அரசும்
இதனையே தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.
எனவே, தமிழ்நாடு மீனவர்களின் வாழ்வாதாரத்தைச்
சீர்குலைக்கும் விதமாக இன்றைய தேதியில்
இலங்கை அரசின் தொடர் பிடியில் இருக்கும்
75 மீனவர்களையும் 149 படகுகளையும் உடனடியாக
விடுவித்திட இலங்கை அரசிற்கு அழுத்தம் தருமாறு
மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைத் தமிழ்நாடு மீனவ
மக்களின் சார்பாக இந்த நேரத்திலே
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

On behalf of the people of Tamil Nadu in General and the fishermen in particular, I request the Hon'ble Prime Minister to kindly use your good office to persuade the Sri Lankan Government to release all the 75 Tamil Nadu Fisherman and 149 fishing boats apprehended by them.

மத்திய அரசின் சுற்றுலா அமைச்சகம்
'சுவதேஷ் தர்ஷன்' என்ற திட்டத்தின் கீழ்
தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலா இடங்களை
அழகுபடுத்தவும், மேம்படுத்தவும்
99 கோடியே 91 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளமைக்கு
மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
இதில், ராமேசுவரத்திற்கு மட்டும்
15 கோடியே 86 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு,
சுற்றுலாப் பயணிகளுக்கான குடிநீர் வசதி, கடற்கரை
சீரமைப்பு, சாலை வசதி, பூங்காக்கள் போன்ற
பல பணிகள் நடந்து வருகின்றன
என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலா  பயணிகள் மற்றும் ஆன்மீகப் பயணிகளை
கவர்ந்து இழுக்கவும் ராமேஸ்வரத்திற்கு அருகில்
இருக்கும் தனுஷ்கோடி இயற்கைஅழகை ரசிக்கும்
வண்ணமும், முகுந்தராயர் சத்திரம் -அரிச்சல் முனை
இணைப்புச் சாலையை, சிறப்பாக புதுப்பிக்க
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா
அவர்களின் முயற்சியில்,
தேசிய நெடுஞ்சாலை ஆண்டுத் திட்டத்தின்கீழ்,
65 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
சிறப்பாகப் புதுப்பிக்கப்பட்டு

இன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் பொற்கரங்களினால் திறக்கப்படவுள்ளது.

இதன்மூலம், இராமேசுவரம் மக்களின்
50 ஆண்டு கால கனவு
நிறைவேறக் காரணமாக இருந்த
மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு
மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இராமேசுவரம் நகராட்சிக்கு
‘சுவச் பாரத்’ என்கிற
மத்திய அரசின் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ்
7 கோடியே 91 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு
அதற்கான பணிகளும்,
மத்திய அரசின் ‘அம்ருத்’ திட்டத்தின்கீழ்
41 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான
பணிகளும் தற்போது நடைபெற்று வருகின்றன.
இத்தகைய அரிய திட்டங்களை அறிமுகப்படுத்தி,
விரைந்து செயல்படுத்தும் மாண்புமிகு பாரதப் பிரதமர்
அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ராமாயணத்தோடு தொடர்புடைய
ராமேசுவரத்தையும், அயோத்தியையும் இணைக்கும்
விதத்தில், சுற்றுலா பயணிகள்
பெரிதும் பயன்பெறும் வகையில்
‘இராமேசுவரம் – அயோத்தி விரைவுத் தொடர் வண்டியை
இன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள்
கொடியசைத்துத் துவக்கி வைத்தமைக்கு,
தமிழ்நாட்டு மக்களின் சார்பாக எனது மனமார்ந்த
நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியத் திருநாட்டிற்குப் பல்வேறு

பெருமைகளைச் சேர்த்த
நமது முன்னாள் குடியரசுத் தலைவரின்
மணி மண்டபம் அமைந்திருக்கும்
இந்த இராமேசுவரம் நகரைக் காண வரும்
சுற்றுலாப் பயணிகளுக்கும்,
பொதுமக்களுக்கும் தேவைப்படும் அடிப்படை வசதிகளான
தெரு விளக்குகள், குடிநீர், பாதாளச் சாக்கடை,
கழிவு நீர் அகற்றுதல்
போன்றவற்றை மேம்படுத்தித் தருவதற்கு
சுமார் 78 கோடியே 17 லட்சம் ரூபாய்
அளவிற்கு நகர வளர்ச்சித் திட்டம் ஒன்று
தீட்டப்பட்டிருக்கிறது.
இதனைச் சிறப்பு நிதி ஒதுக்கீடாக மத்திய அரசு ஏற்று
அனுமதிக்க வேண்டுமென இத்தருணத்தில்
மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம்
இந்த தருணத்திலே கேட்டுக்கொள்கிறேன்.
தேசத் தலைவர்களைச் சிறப்பிக்கும்
மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள்
இதனை மனமுவந்து ஏற்பார்கள் என்றும் நம்புகிறேன்.
வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த விழாவில்
கலந்து கொண்டு எங்களைப் பெருமைப்படுத்திய
மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு
மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
நன்றி! வணக்கம்!

*****

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**